**Court of the District Munsif cum Judicial Magistrate No.I, Usilampatti.**

| | | | | |
|---|---|---|---|---|
| **Case No.** | : | **CC .144/2015** | | |
| **PW/DW/CW** | : | **PW6** | | |
| **Name** | : சுப்ரமணியன் | | **Caste** | : |
| **Father's/ Husband's Name** | : | | **Calling** | : |
| **Village** | : | | **Religion** | : |
| **Taluk** | : | | **Age** | : |

( Accused absent u/s. 355 of BNSS petition filed and allowed)

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 18.12.2024

---

**முதல் விசாரணை:**

நான் தற்போது காவல் துறையில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்று போடிநாயக்கனூரில் குடியிருந்து வருகிறேன். கடந்த 28.05.2015ம் தேதியன்று உசிலம்பட்டி தாலுகா காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியாற்றும் போது உசிலம்பட்டி தாலுகா காவல் நிலைய குற்ற எண் 122/2015 பிரிவுகள் 279, 304 A இதசவாக பதிவு செய்யப்பட்ட வழக்கை 28.05.2015ம் தேதி எனது புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சார்பு ஆய்வாளர் விசாரித்த சாட்சிகள் ராமன், மொக்கராஜ், சிவசக்தி , ஆனந்த், விஜயக்குமார் ஆகியோர்கள் அவரிடம் கூறியது போல் என்னிடமும் கூறியதால் நான் தனியாக வாக்குமலம் எதுவும் பதிவு செய்யவில்லை. சாட்சிகள் செல்வம், பாண்டியம்மாள் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அதே தேதியில் எதிரி ராஜனை நிலையத்தில் ஆஜராகியவரை கைது செய்து தக்க பிணையில் விடுவித்தேன்.

2) சார்பு ஆய்வாளர் முதல் விசாரணையை முடித்து வைத்திருந்த இவ்வழக்கில் 09.06.2015 அன்று TN 63 S 4699 பாரத் நிகேதன் கல்லூரி வாகனத்தை ஆய்வு செய்த மோட்டார் வாகன ஆய்வாளர் மாரிபாண்டி என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன்,. மேற்படி விபத்து வாகனத்திலுள்ள இயந்திர கோளாறு காரணமாக ஏற்பட்டது அல்ல என்று அவர் வழங்கிய சான்றை பெற்றேன். TN 63 S 4699 பாரத் நிகேதன் கல்லூரி வாகனத்திற்கு வழங்கிய மோட்டார் வாகன **ஆய்வறிக்கை அ.சா.ஆ 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

3) அதே தேதியில் இவ்வழக்கில் விபத்துக்குள்ளாகி இறந்துபோன அடைக்கலம் என்பவரின் பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்த மருத்துவர் வினோலியா என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். மேற்படி விபத்துக்குள்ளான நபர் விபத்தினால் அவருக்கு ஏற்பட்ட தலை காயத்தினாலும் , அதிகமான ரத்தபோக்காலும், இருதய செயலிழப்பினாலும் மேற்படி காயத்தினால் ஏற்பட்ட அதிர்ச்சியினாலும் இறந்தார் என்று அவர் வழங்கிய சான்றிதழை பெற்றேன். **அந்த பிரேத பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இறுதியாக அன்றைய தினமே எதிரி ராஜன் மீது மேற்சொன்ன பிரிவுகளின் கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை** :

4) விபத்தில் இறந்த நபர் 16 வயது பையன் என்றால் சரிதான். புகாரில் இறந்த பையன் முன்னால் சைக்கிளில் சென்றதாகவும், அந்த பையனின் அப்பா பின்னால் பைக்கில் சென்றதாகவும் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். விபத்துக்குள்ளா சைக்கிளை புகைப்படம் எடுத்தோ அல்லது நேரடியாகவோ நீதிமன்றத்தில் ஆஜர் செய்யவில்லை என்றால் சரிதான். சாட்சி செல்வம் நான் விசாரித்த போது சத்தம் கேட்டு ஓடிபோய் பார்த்தேன் என்று சொல்லியுள்ளார் என்றால் சரிதான். சாட்சி மொக்கராஜின் தோட்டம் அருகில் இருப்பதாக வரைபடத்தில் காட்டப்படவில்லை என்றால் சரிதான். இறந்த நபர் சிறு வயது பையன் என்பதால் சைக்கிள் பெடல் கால் எட்டாமல் சைக்கிள் ஓட்ட தெரியாமல் வாகனத்தில் தடுமாறி விழுந்ததால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. பொதுவாக ஒரு விபத்து ஏற்பட்டால் பெரிய வாகனத்தின் மீது தான் தவறு என்று கருதி நான்இயந்திரத்தனமாக எதிரி மீது இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும் எதிரிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. வழக்கு ஆவணங்கள் அனைத்து காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல.

S.d./Subramani
Taken down be me in open court
Read over to the witness in the
presence of accused and admitted
by HIM correct.
/Sd.. S.Maharajan
District Munsif cum Judicial Magistrate No.I,
Usilampatti.